ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2153/4 - 2019 දෙසැම්බර් මස 09 වැනි සඳුදා - 2019.12.09

*2153/4 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர்பு இல.: POL/HGD/LND/13/56/005.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/ 9/ 216/ PRD/453.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

மின்னேரிய பிரதேசத்திற்கு எரிபொருள் நிலையமொன்றை வழங்குவதற்காக காணிப் பாகங்களைக் கொள்ளச் செய்தல்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமத்திய மாகாணத்தின் பொலன்நறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் சிங்கள பற்று சிறு பிரிவின் மின்னேரிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை யாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட PO/HKD/2019/127 ஆம் இலக்க 2019.08.21 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு அட்சரம் 'ஏ' எனக் காட்டப்பட்டுள்ள 00736 ஹெக்டயார் விஸ்தீரண முடைய பட்டபிலிகந்த கெலே என்றழைக்கப்படும் காணிப் பாகத்தின் விபரம்:

**எல்லைகள்:**

வடக்கு: துண்டு இல. 4 மற்றும் 7; கிழக்கு: துண்டு இல. 7; தெற்கு: துண்டு இல. 7 மற்றும் 194; மேற்கு: துண்டு இல. 194, 161 மற்றும் 4.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி ஹிங்குரக்கொடை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். டீ. பீ. புஷ்பகுமாரி,
பிரதேச செயலாளர்,
ஹிங்குரக்கொடை.

பிரதேச செயலகம்,
ஹிங்குரக்கொடை.

*12 - 800*